**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**D.V.O.P. 16/2022**

**Deposition of Witness ம.சா.1**

| | |
|---|---|
| **Name : அருணா** | **Father/Husband's Name: குமரவேல்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.01.2024**

**முதல் விசாரணை**

சாட்சி ஆஜர். சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. நான் தற்சமயம் நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் உள்ள எனது பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன். நான் தற்போது பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. நான் தாக்கல் செய்யும் 4 ஆவணங்களையும் மனுதாரராகிய எனது தரப்பில் குறியீடு செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன். மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம்நடைபெற்றதற்கான திருமண பதிவுச்சான்றிதழ் (நகல்) ம.சா.ஆ.1, (எதிர்மனுதாரர் தரப்பில் நகலை தாக்கல் செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது மின்னணு வாயிலாக பெறப்பட்டுள்ள ஆவணம் என்பது தெரியவரும் நிலையில் அது ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது ). மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் திருமணத்தின் போது எடுத்துக்கொண்ட புகைப்படம் ( 6 எண்ணிக்கைகள்) ம.சா.ஆ.2, 2ம் மனுதாரர் வேதா என்பவரின் பிறப்பு சான்றிதழ் (நகல்) (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.3, 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை (நகல்) (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது . மேற்படி பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு எனக்கு மனுப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக் கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை**

**எதிர்மனுதாரர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.**

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.01.19 11:34:33 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**